# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 225/மா/2022**

**நாள் : 07.12.2022**

திரு. B. விஜயகுமார் (ம) திரு. M. விஜயன்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதிநகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் ஆகியோரின் 29.10.2022 நாளிட்ட மனு 31.10.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 225/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு. B. விஜயகுமார் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண்.3/13, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் ஆகியோரின் முறையீட்டு மனுவில்,

> "சென்னை மாவட்டம், யானைகவுனி, மண்டலம்-05, வார்டு – 57, யானை கவுனி பாலச்சாலையில் புதிய மேம்பாலம் அமைப்பதற்காக ரூபாய் முப்பத்திரண்டு கோடி செலவில் திருவாளர் மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் (Mars Construction) அவர்களுக்கு கட்டுமான பணிகள் ஒதுக்கப்பட்டு தற்போது மேம்பாலம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த புதியதாக அமைக்கப்பட்டு வரும் மேம்பாலம் ஒப்பந்தப்படி (Br.D.C.No.B3/0265/2019) குறைந்தது 30 வருடங்கள் வாரன்டியுடன் 50 வருடங்களுக்கு மேற்பட்ட நல்ல நிலையில் இருக்கும் வகையில் கட்டுமான ஒப்பந்தம் (BID DOCUMENT)

போடப்பட்டாலும், நடைமுறையில் மேம்பாலக் கட்டுமானம் தரமற்ற முறையில் ஒப்பந்த விதிகளில் குறிப்பிட்டதற்கு மாறாக நடைபெற்று வருகிறது.

a) ஒப்பந்த விதி 2.2.2. மற்றும் 4-1படி இந்த மேம்பாலக் கட்டுமான பணிகளுக்கு குறிப்பாக சாய்வு தளம் (ramp) அமைப்பதற்கு தரமான கிராவல் மண் அல்லது மணல் ஆகியவற்றையே பயன்படுத்த வேண்டும், ஆனால் இங்கு பெரும்பாலும் தரம்குறைந்த தூவப்பட்ட எரி சாம்பல் (sintered fly ash) பயன்படுத்தி கட்டுமான வேலை செய்து வருகின்றனர் ஒப்பந்த விதிகளுக்கு மாறான இந்த செயலால் இதன் உறுதி தன்மை நிச்சயம் பாதிக்கப்படும்.

b) ஒப்பந்த விதி 2.2.3 படி இந்த மேம்பாலக் கட்டுமான பணிகளுக்கு எண்ணெய், தூசு, அமிலம் மற்றும் உப்புத்தன்மையற்ற தரமான நீர் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், ஆனால் கட்டுமான ஒப்பந்ததாரர் இங்கேயே கிடைக்கும் உப்புத்தன்மையுடைய நீரையே கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தி வருவதால் இதன் உறுதி தன்மை நிச்சயம் பாதிக்கப்படும்.

c) clause 1006 படி இந்த மேம்பாலக் கட்டுமான பணிகளுக்கு ordinary Portland cement 43 and 53 ஆகிய சிமெண்ட் வகையை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆனால் இதை விட குறைந்த தரம் கொண்ட சிமெண்ட் வகையே பயன்படுத்தப்பட்டு வருவதால் இதன் உறுதி தன்மை நிச்சயம் பாதிக்கப்படும்.

d) clause 2001 படி இந்த தாங்கு உருளைகள் (bearings) நல்ல தரமானதாகவும் குறைந்தபட்சம் முப்பது வருடங்களுக்கு உழைக்கும் வண்ணம் உத்திரவாதம் அளிக்கும் வகையில் பொருத்தப்பட வேண்டும். ஆனால் இங்கு ஒப்பந்தத்திற்கு மாறான வகையில் அமைக்கப்பட்டு வருகிறது.

e) இந்த மேம்பாலக் கட்டுமான பணிகளுக்கு பயன்படுத்தப்படும் எஃகு (steel) பொருட்கள் ஒப்பந்த விதி 5.1ல் குறிப்பிட்டுள்ளபடி அழுக்கு, எண்ணெய், தார், பெய்ன்ட், மசகு எண்ணெய் ஆகியவற்றை நீக்கி சுத்தம் செய்யாமல் பாதி துரு பிடித்த நிலையில் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் ஒப்பந்தந்திற்கு மாறான வகையில் சுற்றளவு/பருமன் குறைவான எஃகு (steel bar) பொருட்கள் பயன்படுத்தி மேம்பால பணிகள் நடைபெற்ற வருகிறது.

2. இதேபோன்று இன்னும் பல விசயங்களில் சாதாரணமாக நாங்கள் அறியா வகையில் மேம்பால ஒப்பந்தத்திற்கு மாறான வகையில் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. இதை தற்போதே உடனடியாக கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லையென்றால் மேற்படி கட்டப்பட்டு வரும் மேம்பாலம் நல்ல தரத்துடன் பல வருடங்களுக்கு நிலைத்து நிற்காது, இந்த புகார் தொடர்பாக நாங்கள் ஏற்கனவே மேற்கண்ட சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு நாள்:19.09.2022 அன்று எழுத்துப்பூர்வமான புகார் மனுவை பதிவுத்தபாலில் அனுப்பியிருந்தோம், எனினும் தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட மேம்பால கட்டுமானத்தில் விதிமீறல்கள், குறைபாடுகள் தற்போது வரை தொடர்கிறது.

3. எனவே, இந்த புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள விசயங்கள் தொடர்பாக மதிப்புக்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் வழக்காக எடுத்து

அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்து சட்டப்படி உரிய நடவடிக்கைகள் எடுக்க தங்களை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 28.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 17.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர்கள் 28.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

"சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம்-5ல் யானைகவுனி பாலத்தை புதுப்பிப்பதற்கு மார்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கொடுக்கப்பட்டு, தற்போது மேற்கண்ட ஒப்பந்ததாரரால் பாலப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பாலத்தை செப்பனிடும் பணியில் ஒப்பந்தத்திற்கு மாறாக தரமற்ற பொருட்கள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக பாலத்தின் சாய்வு தளம் (ramp) அமைக்கும் பணியில் கட்டுமானத்திற்கு சுத்தமான நீரை உபயோகப்படுத்தாமல், உப்பு நீரை பயன்படுத்துகின்றனர். மணலுக்கு பதிலாக M-Sand, fly ash போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். துருபிடித்த கம்பியையே உபயோகப்படுத்துகின்றனர். என்ன பிராண்ட் கம்பியை உபயோகப்படுத்துகின்றனர் என்பது தெரியவில்லை. மேலும் ஒப்பந்தத்திற்கு மாறாக பருமன் குறைவான கம்பியையே பயன்படுத்துகின்றனர். மேலும் எந்த கிரேடு பிராண்ட் சிமெண்ட் பயன்படுத்துகின்றனர் என தெரியவில்லை. இவ்வாறு தரமற்ற பொருட்களைக்கொண்டு கட்டப்படும் மேற்கண்ட மேம்பாலம் மிக விரைவில் பழுதாகும். மேற்படி பணிகள் ஒப்பந்தத்தில் கண்டுள்ள நிபந்தனைகளின்படியே (terms and conditions) கட்டப்பட்டுள்ளதா எனவும் தெரியவில்லை.

மேற்கண்ட மேம்பாலப் பணி ரயில்வே துறையும், பெருநகர சென்னை மாநகராட்சியும் பகுதிப் பகுதியாக செய்து வருகின்றன. பெருநகர சென்னை மாநகராட்சி மேற்கொண்டுவரும் மேற்கண்ட மேம்பாலப் பணியில் தரமான பொருட்களை உபயோகப்படுத்திடவும், மேலும் மேம்பாலப் பணி குறித்த காலத்திற்குள் அதாவது 18 மாதத்திற்குள் முடித்திடவும் ஆவன செய்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எங்களால் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எங்களது 29.10.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5–ன் செயற்பொறியாளர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மேம்பாலப் பிரிவின் உதவிப் பொறியாளர் ஆகியோர் 28.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :**

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் யானைகவுனி என்கின்ற இடத்தில் ஏற்கனவே இருந்த மேம்பாலத்தை சரி செய்திட இரயில்வே துறையுடன் சேர்ந்து சென்னை பெருநகர மாநகராட்சி பணிகளை மேற்கொண்டு வருகின்றன. பாலத்தின் தூண்கள் மற்றும் Deck slab அமைக்கும் பணிகள் இரயில்வே துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அம்மேம்பாலத்தில் சாய்வு தளம் (ramp) அதாவது மேம்பாலப் பணி ஏற்றமும், மேம்பாலத்தின் இறக்கம் (slope) அமைக்கும் பணிகள் மாநகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிகள் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளபடியே நடந்து வருகிறது. மேம்பாலப் பணியில் fly ash பயன்படுத்த அண்ணா பல்கலைக் கழகத்திலிருந்த வடிவமைப்பும், (Designing) நெடுஞ்சாலைத் துறையிலிருந்து தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது. (இவற்றின் நகல்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது) மேலும் கட்டுமானப் பணிக்கு உப்பு நீர் பயன்படுத்தப்படுவதில்லை. தரமான 53 கிரேடு சிமெண்ட், 500D சி ஆர் எஸ் கம்பிகள் போன்ற பொருட்களைக்கொண்டே கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பொருட்களை பயன்படுத்திட கண்காணிப்பு பொறியாளரிடம் (பாலங்கள்) ஆணைபெறப்பட்டுள்ளது. இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்கள் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

மேற்கண்ட மேம்பால கட்டுமானப் பணியை தலைமைப் பொறியாளர் (பாலங்கள்) மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் வாரம் ஒருமுறையும் மற்றும் பாலம் சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சிப் பொறியாளர்கள் தினமும் மேற்கண்ட மேம்பாலப் பணியை ஆய்வு செய்து வருகின்றனர் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் மேம்பாலப் பணிகள் இன்னும் 3 மாத காலத்தில் முடிவடைந்துவிடும் என்கின்ற விவரத்தையும், இரயில்வே துறையால் மேற்கொள்ளப்படும் பாலத்தின் தூண்கள் மற்றும் Deck slab அமைக்கும் பணிகள் இரயில்வே துறையால் முடிக்கப்பட்டவுடன் மேற்கண்ட மேம்பாலம் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்” என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் செயற்பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சியின் மேம்பால பிரிவின் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம், அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர்கள் தங்களுடைய மனுவில், சென்னை மாவட்டம், யானை கவுனி, மண்டலம் - , வார்டு – 57, யானைகவுனி பாலச்சாலையில் மார்ஸ் கன்ஸ்டரக்ஷனால் கட்டப்படும் மேம்பாலம் தரமற்ற பொருட்களால் கட்டப்படுவதாகவும், மண்டலம்-5ன் அலுவலர்களுக்கு மனு அளித்தும், நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்து, தங்களது மனு மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளனர்.

மனுதாரர்கள், பாலத்தின் சாய்தளம் (ramp) அமைக்கும் பணியில் சுத்தமான நீரை பயன்படுத்தாமல், உப்பு நீரை பயன்படுத்துவதாகவும், மணலுக்கு பதிலாக M-Sand, fly ash பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சியின் மேம்பால பிரிவின் உதவி பொறியாளர், ரயில்வே துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியால் இணைந்து அமைக்கப்படும் மேம்பாலப் பணியில், சாய்வு தளம் அமைக்கும் பணி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும், fly ash பயன்படுத்த அண்ணா பல்கலைக் கழகத்தின் வடிவமைப்பு (Designing) மற்றும் நெடுச்சாலைத் துறையிடமிருந்து, தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது எனவும் தரமான 53 கிரேடு சிமெண்ட், 500D சி ஆர் எஸ் கம்பிகள் பயன்படுத்துவதாக தெரிவித்துள்ளதையும், கட்டுமானப் பணிகளை தலைமைப் பொறியாளர் (பாலங்கள்) மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் வாரம் ஒரு முறையும் ஆய்வு செய்து வருவதும் அறியமுடிகிறது. Fly ash பயன்படுத்த கண்காணிப்பு பொறியாளரிடமிருந்து ஆணை பெறப்பட்டுள்ளது என்பதும் அறியமுடிகிறது.

மேலும், மேற்கண்ட மேம்பால பணிகள் குறித்து மனுதாரர் 19.9.2022 அன்று, பெருநகர சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறைக்கு மனு அளித்தது தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சி பாலங்கள் துறை, மனுதாரருக்கு 28.10.2022 நாளிட்ட கடிதத்தில் உரிய பதில் அளித்தது வரவேற்கத்தக்கது ஆகும்.

பொது நல நோக்கில் மனுதாரர் மனு அளித்துள்ள நிலையில், இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

சென்னை மாவட்டம், யானை கவுனி, மண்டலம்-5, வார்டு -57, யானை கவுனி பாலச்சாலையில் அமைக்கப்படும் மேம்பாலத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மேம்பால பிரிவின் செயற்பொறியாளர் தெரிவித்தவாறு, சாய்வு தளம் அமைக்கும் பணியில் தரமான சுத்தமான நீரையும், தரமான 53 கிரேடு சிமெண்ட், 500D சி ஆர் எஸ் கம்பிகள் பயன்படுத்துவதை உறுதி செய்திடவும், மேம்பால பணிகளை இன்னும் 3 மாத காலத்திற்குள் முடிக்கவும், பாலத்தின் தூண்கள் மற்றும் Desk Slab அமைக்கும் பணிகளை இரயில்வே துறையால் விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை எடுத்து, மேற்கண்ட மேம்பாலம் வாகனம் நெரிசலை குறைக்கும் விதமாகவும், பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பெருநகர சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறைக்கு அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Greater Chennai Corporation Commissioner is directed to issue instructions to the Chief Engineer and Superintending Engineer of the section dealing with bridges to undertake surprise inspections to ensure that the contractor company is adhering to the terms and conditions of the agreement in supply and use of materials including water. The petitioners have raised specific issues with reference to the agreement clauses and as such the Corporation is duty-bound to act, supervise and enforce the legal process of the work taken at a cost of Rs.32 crores. Unless the senior officers inspect and screw up the standards envisaged in the agreement and work order, the lower level functionaries can't be expected to be strict, neutral and quality conscious while observing the execution of the work as well the nitty - gritty of the technical specifications. The Deputy Commissioner (Works) who is a cadre officer may be instructed to inspect such high-cost works at intervals to ensure that the

various materials used are as per the Corporation's terms and conditions and complaints of this kind are avoided. Transparency and overall integrity in execution of such major projects should be vouched for.

2022–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   14/15, சால்ட் குறுக்கு தெரு,
   துர்கா தேவி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
2. திரு. M. விஜயன்,
   3/13, 4–வது தெரு, கருணாநிதி நகர்,
   தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.
3. அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
4. துணை ஆணையர், (Works)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
   } *He is requested to ensure the implementation of this order*
5. செயற்பொறியாளர்,
   பாலங்கள் துறை,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை வளாகம்,
   சென்னை - 600 003.
6. மண்டல அலுவலர்,
   மண்டலம்–5, பெருநகர சென்னை மாநகராட்சி,
   61, பேசின் பிரிட்ஜ் சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.
7. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.